Ontario

# NEWS RELEASE

Ministry of Health and Long-Term Care

***நோயாளிகளின் வழிமுறைகளையும், அனுபவத்தையும் முன்னேற்றுவதற்காக ஒன்டாரியோ ஒரு சட்டத்தை அறிமுகப்படுத்துகிறது***

***உடல்நல பராமரிப்புக்கான நடவடிக்கைத் திட்டத்தை (அக்ஷன் ப்ளான்) நோயாளிகளுக்கு முதலிடம் அளிக்கும் சட்டம் (பேஷன்ட்ஸ் ஃபர்ஸ்ட் அக்ட்) நிறைவேற்றும்***

**செய்திகள்** ஜூன் 2, 2016

இன்று ஒன்டாரியோ புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தியது. அது அமல்ப்படுத்தப்பட்டால், உடல்நல பராமரிப்பு சேவைகள் கிடைக்கப்பெறுவதை மேம்படுத்தும். இது நோயாளிகளுக்கும் குடும்பங்களுக்கும் விரைவான மற்றும் நல்ல சேவைகளை வழங்கும். இது நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட உடல்நல திட்டத்தில் மக்களுக்கு முதலிடம் அளிக்கும்.

நோயாளிகளுக்கு முதலிடம் என்ற சட்டம், ஒன்டாரியோவின் 14 உள்ளூர் உடல்நல ஒருங்கிணைப்பு நெட்வர்க்குகளுக்கு (LHINs) விரிவாக்கப்பட்ட பங்கை வழங்கும். இது முதன்மை பராமரிப்பு, வீடு மற்றும் சமூக பராமரிப்பை உட்படுத்தும். இது முதன்மை சேவைகளின் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமிடுதலையும் அதை செயல்ப்படுத்துதலையும் அதிகரிக்கும். அத்துடன் நோயாளிகளின் பராமரிப்புக்கு அதிக அளவு நிதியை வழங்குவதையும் உட்படுத்தும்.

பராமரிப்புக்கு இலகுவான வழிமுறை, பராமரிப்பு தொடருதல் மற்றும் அதன் ஒருங்கிணைப்பு, மொழி மற்றும் கலாச்சாரம் சார்ந்த பொருத்தமான சேவைகள் ஆகியவற்றை இந்த மாற்றங்கள் உள்ளடக்கும். பின்வருவனவற்றின் மூலம் அக்ஷன் ப்ளானை ஆதரிக்கும்:

- நோயாளிகளுக்கான முதன்மைப் பராமரிப்பு வழியை மேம்படுத்துதல் – உதாரணமாக குடும்ப உடல்நல பராமரிப்பை வீட்டுக்கு அருகில் பெற்றுக்கொள்ள ஒருவர் முயலும் பொழுது அதற்கு ஒரு இலக்கத்தை மட்டுமே அழைத்தல்.
- முதன்மை உடல்நல பராமரிப்பு, மருத்துவமனைகள், வீட்டு மற்றும் சமூக பராமரிப்புகளு இடையே உள்ளூர் தொடர்பு மற்றும் பேச்சுத் தொடர்பை மேம்படுத்துதல். இது சமனான வழிமுறைகளைத் திறந்து நோயாளிகளின் அனுபவத்தை இலகுவாக்கும்.
- உடல்நல பராமரிப்பு வழங்குபவர்கள் தங்கள் உடல்நல பராமரிப்பு திட்டங்களை பகிர்ந்துகொள்ளவும் புதுப்பித்துக்கொள்ளவும் உதவுவதன் மூலம் நோயாளிகள் தங்கள் பிரச்சனைகளை ஒருமுறை மட்டுமே கூறுவதை உறுதிப்படுத்துவது.
- மருத்துவர்கள், தாதிகள், மற்றும் வேறு முதன்மை பராமரிப்பு வழங்குபவர்கள், தங்கள் நோயாளிகள் வேண்டிய உடல்நல பராமரிப்பை பெற்றுக்கொள்வதை இலகுவாக்குதல்.
- தீவிர, முதன்மை, வீட்டு மற்றும் சமூக, மனநல மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமைத்தன்மை மற்றும் நீண்ட கால பரமரிப்புகளுக்கு இடையில் நோயாளிகளை இலகுவாக மாற்றம் செய்தல்.
- எதை எதிர்பார்ப்பது என்பதை மக்கள் அறிந்துகொள்வதற்காகவும் மாகாணத்தில் எந்த இடத்தில் அவர்கள் வாழ்ந்தாலும் நல்ல பராமரிப்பை பெற்றுக்கொள்வதற்காகவும் மாகாணம் முழுவதும் வீட்டு மற்றும் சமூக பராமரிப்பை ஒரேவிதமாக முன்னேற்றுதல்.
- செயற்பாட்டை கண்காணிப்பதன் மூலம் உடல்நலத் திட்டத்தையும் பொறுப்புக்கூறலையும் பலப்படுத்துதல்.
- LHIN கள் மற்றும் உள்ளூர் உடல்நல அமைப்புகளுக்கிடையே முறையான உறவை உருவாக்குவதன் மூலம் உடல்நல அமைப்புத் திட்டத்தில் பொதுமக்கள் உடல்நலம் ஒரு பங்கு வகிப்பதை உறுதிப்படுத்துதல்.

- தங்கள் சமூகத்தினரின் தேவைகளை நன்கு புரிந்துகொண்டவர்கள் தீர்மானங்களை செய்வதையும், LHIN அமைப்புகள் தாங்கள் சேவிக்கும் சமூகத்தினரை பிரதிபலிப்பதையும் உறுதிப்படுத்துவதற்காக உள்ளூர் உடல்நல திட்டத்தை வசதிப்படுத்துதல்.

இந்தப் புதிய சட்டம் நோயாளிகளுக்கு முதலிடம்: உடல்நல பராமரிப்புக்கான அக்ஷன் ப்ளானை ஐ ஆதரிக்கும். இது வீடு மற்றும் சமூகப் பராமரிப்புக்கான வழிகளை விரிவாக்கி, ஒவ்வொரு ஒன்டாரியோ வாசியும் முதன்மை பராமரிப்பை பெற்றுக்கொள்ள வழிதிறந்து ஒன்டாரியோவின் உடல்நல பராமரிப்பை நன்கு மாற்றியமைக்கும்.

ஃபர்ஸ்ட் நேஷன்ஸ், மீடிஸ், இனுவிட், நகர்ப்புற பழங்குடி பங்காளிகள் மற்றும் உடல்நல பராமரிப்பு வழங்குபவர்களுடன் ஒன்டாரியோ தொடர்ந்து வேலை செய்யும், இதன்மூலம் அவர்களுடைய தனித்துவம் வாய்ந்த தேவைகள் அதற்கான சமமான வழிமுறைகள் ஆகியவை பற்றிய அவர்களுடைய கருத்துகள் கேட்கப்படுவதை உறுதிசெய்யும்.

நல்ல பயன் தரக்கூடிய மாற்றங்களை உருவாக்குவதற்கு பழங்குடி மக்களை ஈடுபடுத்தி அதன் மூலம் அவர்களுடைய தேவைகளை கண்டறிந்து அவற்றை நிறைவேற்ற கொடுக்கப்பட்ட வாக்குறுதியை ஒன்டாரியோ காப்பாற்றும்.  தற்போதைய அல்லது எதிர்காலத்திலான பராமரிப்பு வழிமுறைகளில் எந்தத் தடைகளும் சிக்கல்களும் ஏற்படாத விதமாக ஒன்டாரியோ இந்த மாற்றங்களை கொண்டுவரும்.

நோயாளிகளுக்கு முதலிடம் என்ற சட்டம்  மேம்பட்ட ஒன்டாரியோவைக் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் திட்டமாகும்.  இது நோயாளிகளுக்கு விரைவான பராமரிப்பு வழைகளை திறக்கும், மேம்பட்ட வீடு மற்றும் சமூக பராமரிப்பை வழங்கும், மேலும் அவர்கள் ஆரோக்கியமாக இருக்க தேவையான தகவலை வழங்கும்.  இதன் மூலம் பல சந்ததிகளுக்கு நிலைத்திருக்கக்கூடிய உடல்நல பராமரிப்புத் திட்டத்தை உருவாக்கும்

**மேற்கோள்கள்**

“உண்மையிலேயே நோயாளிகளுக்கு முதலிடம் வழங்கும் ஒரு உடல்நல பராமரிப்பு திட்டத்தை உருவாக்க ஒன்டாரியோ உறுதி பூண்டுள்ளது.  இது ஒருவர் எங்கு வாழ்ந்தாலும் விரைவாக முதன்மை பராமரிப்பை பெற்றுக்கொள்ள உதவுவதோடு, உடல்நல திட்டங்கள் பல சந்ததிகளுக்கு நிலை நிற்பதை உறுதிசெய்யும்.  இந்த முக்கியமான சட்டத்தை உருவாக்குவதில் பங்குகொண்டு கருத்துக்கள் வழங்கிய ஆயிரக்கணக்கான ஒன்டாரியோ வாசிகளுக்கு எமது நன்றிகள்.  நாம் ஒன்றிணைந்து ஒன்டாரியோவின் உடல்நல பராமரிப்புத் திட்டத்தை மேம்படுத்தி அதை உலகின் மிகச் சிறந்த ஒரு திட்டமாக மாற்றுவோம்.”
-- டாக்டர் எரிக் ஹோஸ்கின்ஸ், உடல்நல மற்றும் நீண்ட கால பராமரிப்பு அமைச்சர்

“நாம் அல்லது நமது அன்பானவர்களில் ஒருவர் நோய்வாய்ப்படும் போது, சரியான உடல்நல பராமரிப்பை இலகுவாகவும் சிக்கல் இல்லாமலும் பெற்றுக்கொள்ள உடல்நல பராமரிப்பு திட்டங்கள் உதவ வேண்டும்.  ஒரு பணிபுரியும் மருத்துவராக, ஒன்டாரியோ அரசாங்கம் அறிமுகம் செய்யும் இந்த சட்டம் நம் எல்லோருக்கும் முதன்மை உடல்நல பராமரிப்பை நல்ல படியாக வழங்கி எல்லா நோயாளிகளுக்கும் நன்மைகளை கொண்டுவரும் என்பதால், மகிழ்ச்சி அடைகிறேன்.”
--  டாக்டர் டேவிட் ப்ரைஸ், “நோயாளிப் பராமரிப்பு குழுக்கள்: சனத் தொகையை அடிப்படையாகக் கொண்ட ஒன்டாரியோவின் உடல்நல பராமரிப்பு” இன் துணை எழுத்தாளர்

“நோயாளிகளுக்கு முதலிடம் என்ற சட்டம் சமமான பராமரிப்பை உறுதிசெய்து சமூகக் காரணிகளை கருத்தில் கொண்டு செயற்பட வடிவமைக்கப்பட்டுள்ளதால் மக்களையும் சமூகங்களையும் ஒன்டாரியோவின் உடல்நல பராமரிப்புத் தொகுதியில் முதலிடத்தில் வைக்க உதவும்.”
-- ஏட்ரியான டெற்லி, முதன்மை நிறைவேற்று அதிகாரி, ஒன்டாரியோ உடல்நல மையங்களின் அஸோசியேஷன்

**துரித உண்மைகள்**

- ஒவ்வொரு வருடமும் மேலும் 700 மருத்துவர்களை அதிகரிப்பதற்கு ஒன்டாரியோ திட்டமிடுகிறது.
- இப்போது 94 சதவீதமான ஒன்டாரியோ வாசிகள் முதன்மை உடல்நல பராமரிப்பு வழங்குபவரை கொண்டுள்ளனர்.  நோயாளிகளுக்கு முதலிடம்: உடல்நல பராமரிப்புக்கான அக்ஷன் ப்ளானின் வேலையின் மூலமாக தேவைப்படும் ஒவ்வொருவருடனும் ஒரு குடும்ப மருத்துவர் அல்லது தாதிப் பயிற்சியாளரை தொடர்புபடுத்த ஒன்டாரியோ உறுதிபூண்டுள்ளது.
- 2015 இல் , 205 தாதிப் பயிற்சியாளர்களை ஒன்டாரியோ பெற்றுக்கொண்டது.

- கடந்த பத்து வருடங்களில் வீட்டு மற்றும் சமூகப் பராமரிப்பில் முதலீடுசெய்தல் 90 வீதமாக உயர்ந்துள்ளது.
- உடல்நல பராமரிப்பு அமைப்பின் முன்னேற்றங்களை அறிவிப்பதற்கு உதவியாக மாகாணம் முழுவதிலும் 6000 க்கும் அதிகமான நபர்கள் மற்றும் அமைப்புகளுடன்  அமைச்சு ஆங்கிலம் மற்றும் ஃபிரெஞ்சில் ஆலோசித்து விரிவாக ஈடுபட்டது.
- வழிமுறைகள் மற்றும் நோயாளி அனுபவத்தை மேம்படுத்துவதற்காக LHIN கள் உள்ளூர் உடல்நல பராமரிப்பை திட்டமிட்டு, ஒருங்கிணைத்து நிதி வழங்குகின்றன.
- புதிய சட்டம் அமலாக்கப்படுமானால், அது வேறு சட்டங்களோடு, பழைய உள்ளூர் உடல்நல அமைப்பு ஒருங்கிணைப்பு சட்டம் 2006 மற்றும் வீட்டு பராமரிப்பு மற்றும் சமூக சேவைகள் சட்டம் 1994 ஐ மாற்றீடுசெய்யும்.
- அமலாக்கப்படுமானால், நோயாளிகளுக்கு முதலிடம் சட்டத்தை மூன்று வருடங்களில் ஒன்டாரியோ மீழ்பார்வை செய்யும்.

**மேலும் தெரிந்துகொள்ளுங்கள்**

Patients First: Reporting Back on the Proposal to Strengthen Patient-Centred Health Care in Ontario

Patients First: A Proposal to Strengthen Patient-Centred Health Care in Ontario

Patients First: Action Plan for Health Care -- Year One Results

Patients First: Action Plan for Health Care

Local Health Integration Networks

**பொதுசன விசாரிப்புகளுக்கு சேர்விஸ் ஒன்டாரியோ, இன்ஃபோலைனை 1-866-532-3161  என்ற இலக்கத்தில் அழையுங்கள் (ஒன்டாரியோவில் மட்டும் கட்டணமில்லை)**

ஷே க்ரீன்ஃபீல்ட், அமைச்சரின் அலுவலகம், 416-325-5230

டேவிட் ஜென்சன், உடல்நல மற்றும் நீண்டகால பராமரிப்பு அமைச்சு,

416-314-6197

**ontario.ca/health-news**

*Disponible en français*